

ஆவடி சட்டமன்ற தொகுதி உட்பட்ட ஆவடி 40 வது வார்டில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் கோவிலில் மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சாமு.நாசர் எம்எல்ஏ கல்வெட்டை திறந்து வைத்து ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார். உடன் மண்டல குழு தலைவர் ஜி.ராஜேந்திரன், ஆவடி மாநகரக் கழக பொறுப்பாளர் சன் பிரகாஷ், வட்ட கழக செயலாளர் விஜயன் கவுன்சிலர் சத்யா ரவி உள்பட பலர் உள்ளனர்

### புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியம் முடிச்சூர் ஊராட்சியில்

# 12 இடங்களில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்!

## அ.வினாயகமூர்த்தி தலைமை! எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. உணவு வழங்கினர்!

காஞ்சிபுரம், ஜுன் 11 -

முடிச்சூர் ஊராட்சியில் உள்ள 6 கிளைகள் மற்றும் வார்டுகளில் செம்மொழி தந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவிற்கு முடிச்சூர் ஊராட்சி மன்ற துணை தலைவரும், ஒன்றிய கழக துணை செயலாளருமான அ.வினாயகமூர்த்தி தலைமை தாங்கினார்.துணை செயலாளர் மஞ்சு ஜெயபாலன்,மாவட்ட பிரதிநிதி இளங்கோ, புருஷோத்தமன், முன்னிலை வகித்தார்கள்.

ஒன்றிய கழக செயலாளர் ஜி.கே.விவேகானந்தன் என்கிற ரவி கலந்து கொண்டு கழக கொடி ஏற்றி தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார். அனைத்து கழக நிர்வாகிகள், தோழர்கள் மலரஞ்சலி செலுத்தினார்கள்.

தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா முடிச்சூர் ஆசிரமத்தில் முதியோர்களுக்கு உணவு விருந்தினை வழங்கி துவக்கி வைத்தார்.

அ.வினாயக மூர்த்தி தலைமையில் முடிச்சூர் திமுக அனைத்துக் கிளைகளிலும் கொடியேற்றி,மலரஞ்சலி செலுத்தினார்கள். மக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத் திட்டங்களும் வழங்கப்பட்டது.

முடிச்சூர் கிளையில் 3 இடங்களில் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது செயலாளர் க.கந்தசாமி அவர்களுடன்,லவின் சேகர்,வெங்கட்ராமன்,ஜார்ஜ், மற்றும் கழக மகளீர்,இளைஞர்,மாணவர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

அண்ணா நகர் கிளையில் 2 இடங்களில் கொடியேற்றபட்டது அ.வினாயகமூர்த்தி, முருகன், மாயஜோதி, புஷ்பவாகினி, கலைமணி, தினகரன், கோபால் மற்றும் மகளீர், இளைஞர், மாணவர் அணி கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

முடிச்சூர் மேற்க்கு கிளை 3 இடங்களில் கழக கொடி யேற்றப்பட்டது. இதில்

செயலாளர் சுனில் மேத்யு, கோவிந்தசாமி, சாலமன், ஜெபா, சங்கர்,புனித ராஜா, ராஜா,சுரேஷ்,மணி மற்றும் மகளீர்,இளைஞர்,மாணவர் அணி கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு அன்னதானம்,நலத்திட்டங்கள் வழங்கினார்கள். லட்சுமி நகர் கிளையில் 2 இடங்களில் கழக கொடி ஏற்றப்பட்டது.

செயலாளர் குமார் அவர்களுடன் கிருஷ்ணமூர்த்தி, சந்திரன்,ஆல்பர்ட், மாணிக்கம்,முருகவேல், குப்புசாமி, ராஜ்குமார், லக்ஷ்மணன், கோபி மற்றும் மகளீர்,இளைஞர்,மாணவர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

கொம்மியம்மன் நகர் கிளையில் கழக கொடி 2 இடங்களில் கழக கொடி ஏற்றப்பட்டது.

செயலாளர் சுகுமார், ஜெயபாலன்,கண்ணன்,மகிராணி,ரேணு, சீனிவாசன், லோகநாதன் மூர்த்தி, பாண்டியன்,ஜெயராமன்,சங்கர், கண்ணன் மற்றும் மகளீர், இளைஞர்,மாணவர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

அன்னை இந்திரா நகர் கிளையில் கழக கொடி ஏற்றப்பட்டது. செயலாளர் ப.ச.ரமேஷ் அவர்களுடன் மலர்விழி, மணிவண்ணன், தினேஷ்,சுரேஷ் பாபு,ஜானகி மற்றும் மகளீர்,இளைஞர்,மாணவர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். எங்கள் தலைவர் கலைஞர் 100 வது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

# கலைஞருக்கு 16 அடி உயர வெண்கலச் சிலை.... முதல் பக்கத் தொடர்ச்சி

சேலம், வீரபாண்டி, பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 778 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் முதற்கட்டமாக 301 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் மற்றும் ரூ.102 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சேலம் அரசு சட்டக் கல்லூரிக்கான மாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய நிரந்தரக் கட்டடத்தினைத் திறந்து வைக்கவுள்ளார்.

**நலத்திட்ட உதவிகள்**

மேலும், உருக்காலையில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட பேரிடர் மையம், நெடுஞ்சாலைத் துறை, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண்மை உழவர் நலத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, பள்ளிக் கல்வித் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, நீர்வள ஆதாரத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள முடிவுற்றத் திட்டப்பணிகளைத் திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில், பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித்தலைவர், மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

**மேட்டூர் அணை**

இதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை (12.06.2023) காலை குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து வைக்கவுள்ளார்.



தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் தொடக்க விழாவையொட்டி சென்னை ராமகிருஷ்ணா மாணவர் இல்லத்தில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் உணவு வழங்கினார்.

# அனைத்து துறைகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வெற்றி கண்டவர் தலைவர் கலைஞர்!

## அயப்பாக்கத்தில் நடைபெற்ற கிராமிய கலை விழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

திருவள்ளூர், ஜுன் 11-

திருவள்ளூர் மாவட்டம் வில்லிவாக்கம் ஒன்றியம் அயப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற கலை பண்பாட்டு இயக்கம் சார்பில் 100 கலைஞர்கள் பங்கேற்கும் கிராமிய கலை விழா பேரறிஞர் அண்ணா பசுமை எழில்மிகு பூங்காவில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கழகப் பொருளாளரும் தமிழ்நாடு நாடாளுமன்ற குழு தலைவருமான டி.ஆர்.பாலு எம்.பி தலைமை தாங்கினார்

மதுரவாயில் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் கணபதி முன்னிலை வகித்தார் அயப்பாக்கம் முதல் நிலை ஊராட்சி மன்ற தலைவர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி வரவேற்புரையாற்றினார்

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கழகத் துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற குழு துணை தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி நூறு கலைஞர்கள் பங்கேற்ற கிராம கலை விழா நிகழ்ச்சியை துவக்கி வைத்து பார்வையிட்டார் நிகழ்ச்சியில் பேசிய கனிமொழி கருணாநிதி,

சங்கத் தமிழுக்கு பிறகு தமிழிலும் தமிழ் நாட்டிலும் மக்களை பற்றி பேசுவது இந்த மண் சார்ந்த கலைஞர்கள் மட்டும் தான், நம்முடைய பாரம்பரியம் என்று சொல்லும் போது இந்த மண்



சார்ந்த கலைஞர்கள் வார்த்தைகள் வடிவங்களில் மட்டும் தான் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.. அதனால் தான் இந்த கலைஞர்களை தலைவர் கலைஞர் ஒவ்வொரு நாளும் நேசித்தார் தமிழ் மண் சார்ந்த கலைஞர்களை மிகப்பெரிய அளவில் கொண்டாடிய தலைவர் மதித்த தலைவர் உணர்ந்து புரிந்து கொண்ட தலைவர் கலைஞர் என்ற காரணத்தால் தற்போது அவருடைய நூற்றாண்டு விழாவில் கிராமிய கலைஞர்களை அழைத்து மீண்டும் சமூகத்தை பற்றியும் நாட்டை பற்றியும் அக்கறையுடன் செய்திகளை சொல்லுங்கள் என இந்த நிகழ்வுகளை நடத்தி கொண்டிருக்கிறோம்..

ஒவ்வொரு நாளும் நம்மை ஆச்சரியப்படுத்த கூடிய தலைவராகவே வாழ்ந்தவர் கலைஞர் என புகழாரம் சூட்டினார்..

அனைத்து துறைகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து அதில் வெற்றியை கண்டிருக்கும் மனிதர் இருக்கிறார் என்றால் அது நம்முடைய தலைவர் கலைஞர் தான்..

ஒரு மனிதனை பற்றி ஓராண்டு முழுக்க பேச முடியும் என்றால் அது தலைவர் கலைஞர் பற்றி தான், ஓராண்டு கடந்து அவரை பற்றி பேசக்கூடிய செய்திகள் நிச்சயமாக இருக்கும் என தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து பாரம்பரிய கலைஞர்களுடன் புகைப்படம் எடுத்தப் பின் பசுமை பூங்காவை சுற்றி பார்வையிட்ட கனிமொழி கருணாநிதி எம்.பி. மரக்கன்றுகளை நடவு செய்தார்.. பின் அங்கு நிறுவப்பட்டிருந்த கலைஞர் சிலை அருகே புகைப்படம் எடுத்து கொண்டார். இதில் தமிழ்நாடு இயல் இசை கலை நாடக மன்ற தலைவர் வாகை சந்திரசேகர் செயலாளர் விஜயா தாயன்பன், மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குனர் ரிஷப், வில்லிவாக்கம் ஒன்றிய குழு தலைவர் கிரிஜா, மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலை இசை கலைஞர்கள் அரசுத்துறை அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தி.மு.தனியரசு ஏற்பாடு: முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# திருவொற்றியூர் கிழக்குப் பகுதியில் நல உதவிகள் வழங்கும் விழா!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. – கலாநிதி வீராசாமி எம்.பி. – கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. பங்கேற்பு

சென்னை, ஜுன் 11 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி சார்பில் இன்று (11-6- 2023 ) காலை 10 மணிக்கு திருவொற்றியூர் சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் நடைபெறுகிறது. எம்.வி.குமார், ஆர்.சம்பத், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், எஸ்.தமிழ்செல்வன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

கார்த்திகேயன், டிசிவி மணிகண்டன், எம்.எல்.சரவணன், குறுத்து சி.முனுசாமி, க.வீ.சத்திஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், இ.கார்த்திகேயன், வி.கண்ணதாசன், வீ.கவி கணேசன், சி.தசரதன், ஆர்.பத்மநாபன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ். கணேசன், டி.ஏ.ராஜ், இரா. முருகேசன், சாந்திபக்தன், வை.ம.அருள்தாசன், ஏ.வி. ஆறுமுகம், மாமன்ற உறுப்பினர்கள் டி.சி.வி.ராஜகுமாரி, சரண்யா கலைவாணன், சுசிலா ராஜா, பானுமதி சந்தர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். பகுதி அவை தலைவர் ஆர்.சி. ஆசைதம்பி தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கழக கொடிஏற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இதில் தொகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், பொதுகுழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி வட்ட அணியின் நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன். எம்.எம்.செந்தில் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு கேட்டுக்கொண்டுள்ளார்.



சென்னை – திருவள்ளூர் – காஞ்சிபுரம் மாவட்ட விசைப்படகு மீனவர் நலச் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரவீணா போட் உரிமையாளர் கே.குப்பன் ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசரை சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார்.

### தஞ்சாவூர் மாவட்டத்திற்கான

# திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடும் தி.மு.கழக வேட்பாளர்கள் பட்டியல்!

## மாவட்டக் கழகச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தஞ்சாவூர் மாவட்டத்திற்கான திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தல் 23.06.2023 அன்று நடைபெற உள்ளது. மேற்படி தேர்தலில் கீழ்காணும் கழகத்தினர்கள் ஊரக பகுதி மற்றும் மாநகர, நகர, பேரூர் பகுதிகளுக்கான வேட்பாளர்களாக போட்டியிடுவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஊரக பகுதிக்கான வேட்பாளர்கள்.**

| வ.எண். | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | வேட்பாளர்கள் பெயர் |
|---|---|---|
| 1 | மாவட்ட ஊராட்சி 4 வது வார்டு உறுப்பினர் | சா.சரவணன் |
| 2 | மாவட்ட ஊராட்சி 6 வது வார்டு உறுப்பினர் | ஜெ.முரளி |
| 3 | மாவட்ட ஊராட்சி 8 வது வார்டு உறுப்பினர் | கோ.தாமரைச்செல்வன் |
| 4 | மாவட்ட ஊராட்சி 12 வது வார்டு உறுப்பினர் | ஜெ.பரிமளம் |
| 5 | மாவட்ட ஊராட்சி 13 வது வார்டு உறுப்பினர் | த. உதயன் |
| 6 | மாவட்ட ஊராட்சி 19 வது வார்டு உறுப்பினர் | ஆ.சுபா |
| 7 | மாவட்ட ஊராட்சி 23 வது வார்டு உறுப்பினர் | ஞா.செந்தாமரை |
| 8 | மாவட்ட ஊராட்சி 26 வது வார்டு உறுப்பினர் | அ.மூர்த்தி |

**மாநகர/நகர/ பேரூர் பகுதிக்கான வேட்பாளர்கள்**

| வ எண் | மாநகராட்சி/நகராட்சி/ பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் | வேட்பாளர்கள் பெயர் |
|---|---|---|
| 1 | தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு 18 உறுப்பினர் | அ.சசிக்கலா |
| 2 | கும்பகோணம் மாநகராட்சி 32 வார்டு உறுப்பினர் | எ.சாகுல்ஹமீது |
| 3 | பட்டுக்கோட்டை நகராட்சி வார்டு 19 உறுப்பினர் | ஆர்.ரவிக்குமார் |
| 4 | திருவிடைமருதூர் பேரூராட்சி வார்டு 08 உறுப்பினர் | சுந்தர.ஜெயபால் (எ) மயில்வாகணன் |

தஞ்சாவூர் மாவட்டத்திற்கான ஊரக மற்றும் மாநகர, நகர, பேரூர் திட்டக்குழு உறுப்பினர்கள் பொறுப்பிற்கு போட்டியிடுவதற்காக தஞ்சாவூர் மாவட்ட கழகத்தின் சார்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ள மேற்கண்ட கழக வேட்பாளர்களை மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து வெற்றிபெற செய்திட அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

**சு.கல்யாணசுந்தரம்** எம்.பி.
செயலாளர்,
தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க.

**துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ.**
செயலாளர்,
தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க.

**கா.அண்ணாதுரை** எம்.எல்.ஏ.
செயலாளர்,
தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் மாவட்டம் பொதட்டூர்பேட்டை முன்னாள் அவை தலைவர் கழக மூத்த முன்னோடி டி.எம்.பழனி உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார் தகவல் அறிந்த திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அன்னாரின் உடலுக்கு மலர் மாலை அணிவித்து குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார் இதில் மாநில நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், பேரூர் கழக செயலாளர் டி.ஆர்.கே.பாபு, முன்னாள் பொறுப்பு குழு உறுப்பினர் உதயசூரியன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்

### அரசு எச்சரிக்கை : விதிமுறைகளை மீறி

# விளம்பர பலகைகள் வைத்தால் 3 ஆண்டு சிறை !

சென்னை, ஜுன் 11 -

பேனர்கள் மற்றும் பதாகைகள் ஆகியவை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிமம் பெறாமல் நிறுவப்படக்கூடாது. உரிமம் பெறாமல் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள், பேனர்கள், பதாகைகள் ஆகியவை உடனடியாக பிரிவு 1170 ன்படி அகற்றப்பட வேண்டும்.

சென்னை: நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: 2022ம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 35 ன்படி திருத்தப்பட்ட 1998ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின்படியும், அதன் கீழ் உருவாக்கப்பட்ட 2023ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின்படியும், விளம்பரப் பலகைகள், பேனர்கள் மற்றும் பதாகைகள் ஆகியவை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிமம் பெறாமல் நிறுவப்படக்கூடாது. இச்சட்டம் 2023ம் ஆண்டு ஏப்ரல் 13ந் தேதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. உரிமம் பெறாமல் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள், பேனர்கள், பதாகைகள் ஆகியவை உடனடியாக பிரிவு 1170 ன்படி அகற்றப்பட வேண்டும். அதேபோல், உரிமக்காலம் முடிந்தபின்பும், சட்ட விதிமுறைகளை மீறி வைக்கப்பட்டுள்ள அனைத்து விளம்பரப் பலகைகள், பேனர்கள், பாதகைகள் ஆகியவையும் உடனடியாக பிரிவு 117Pன்படி அகற்றப்பட வேண்டும். மேற்படி பிரிவுகள் 117O, 117P ஆகியவற்றின் படி, விளம்பரப் பலகைகள், பேனர்கள், பதாகைகள் ஆகியவற்றை அகற்றத் தவறினால், அவைகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளே அகற்றி விடும். பின்பு, அதற்கான செலவினம் பிரிவுகள் 117O, 117P மற்றும் விதிகள் 338, 345 ஆகியவற்றின் படி அந்தந்த நிறுவனங்களிடம் இருந்து அல்லது தனி நபர்களிடம் இருந்து வசூலிக்கப்படும். மேற்கூறிய விதிமுறைகளை மீறி செயல்படும் நிறுவனம், தனிநபர், நிலம் மற்றும் கட்டிட உரிமையாளர் ஆகியோர் மீது மூன்று வருட சிறை தண்டனையோ அல்லது ரூ.25 ஆயிரம் அபராதமோ அல்லது இவை இரண்டும் சேர்த்தோ விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. உரிய அனுமதியின்றி பேனர்கள், பதாகைகள் ஆகியவற்றை அமைக்கும் நிறுவனம், தனிநபர், நிலம் மற்றும் கட்டிட உரிமையாளர் ஆகியோர் மீது ஒரு வருட சிறை தண்டனையோ அல்லது ரூ.5 ஆயிரம் அபராதமோ அல்லது இவை இரண்டும் சேர்த்தோ விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. விதிகள் 322, 341ல் வரையறுக்கப்பட்டுள்ள இடங்களில் மற்றும் வரையறுக்கப்பட்டுள்ள அளவுகளில் மட்டுமே விளம்பரப் பலகைகள், பேனர்கள், பதாகைகள் ஆகியவைகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிமம் பெற்று அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. விளம்பரப் பலகைகள், பேனர்கள், பதாகைகள் ஆகியவற்றின் மூலம் பொதுமக்களுக்கு எதிர்பாராத விபத்துக்கள் ஏற்பட்டு, பொதுமக்கள் காயமடைந்தாலோ அல்லது ஏதேனும் உயிரிழப்பு ஏற்பட்டாலோ அதற்குரிய இழப்பீடு வழங்குவதற்கு விளம்பரப் பலகைகள், பேனர்கள், பதாகைகள் ஆகியவற்றை அமைத்த நிறுவனமும், தனிநபரும், நிலம் மற்றும் கட்டிட உரிமையாளரும் முழு பொறுப்பாவார்கள். மேலும் உரிய குற்றவியல் வழக்கு பதியப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சிங்கார இரத்தினசபாபதி

**ஜுன் 11 (2020)**



**தொ.மு.ச. பேரவையில் இணைப் பொதுச்செயலாளர், பொருளாளர் – தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் ஆகிய பொறுப்பு வகித்ததோடு, மின்கழக தொ.மு.ச. தலைவராக – பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்து, மின் வாரிய தொழிலாளர்களுக்காக பாடுபட்டவர்.**

**கழக ஆட்சியில், மின் ஊழியர்களுக்கு முதல்முறையாக ஊதிய உயர்வு – அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் பெற்றுத் தந்ததோடு, ஆயிரக்கணக்கான ஒப்பந்த ஊழியர்களுக்கு பணி நிரந்தரம் பெற்றுத் தந்தார். அ.தி.மு.க. ஆட்சியில் ஊழியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கண்டித்துப் போராட்டங்கள் நடத்தியதோடு, 2.57 சதவீத ஊதிய உயர்வை போராடிப் பெற்றுக் கொடுத்தது என மின்வாரிய ஊழியர்களின் நலன்களுக்காகவும் – உரிமைகளுக்காவும் தொடர்ந்து குரல் கொடுத்தவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் பேராசிரியர் பெருந்தகையின் பேரன்பையும் பாசத்தையும் பெற்றதோடு, தலைமைக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் – மாநாடுகளிலும் மின்கழக தொ.மு.ச.வினரை பெருந்திரளாக பங்கேற்க வைத்து, கழகத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**